**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 83** **நாள்: 09.06.2016**

**<u>பருவமழையினை எதிர்நோக்கி பெருநகர சென்னை மாநகராட்சியால் எடுக்கப்பட்டு வருகின்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மக்களுக்கான பல்வேறு அடிப்படை வசதிகளை சிறப்பாக செய்து வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டுப்பாட்டு அறை இயக்கத்தில் உள்ளது. கம்பியில்லா தந்தி, தொலைபேசி மற்றும் கைபேசி தகவல் பரிமாற்ற வலைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெறப்படும் தகவல்களை பரிமாற்றம் செய்ய 24 மணிநேரமும் அனைத்து மண்டலங்களிலும் அலுவலர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். அனைத்து சுரங்கப்பாதைகளிலும் பணி செய்ய அலுவலர்களை நியமிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அனைத்து நீரிறைக்கும் விசை மோட்டார்களும் (பம்பு செட்டுகள்) பரிசோதிக்கப்பட்டு இயக்கத்தில் உள்ளன. தேவையான எரிபொருளும் வழங்கப்பட்டுள்ளது.

பூங்கா கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் விழுகின்ற மரங்களை உடனடியாக அகற்ற ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தில் இயங்கும் மரம் அறுக்கும் ரம்பங்கள் மற்றும் இயந்திரங்கள் இயங்கும் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு வாகனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கும் இடங்கள் இனங்காணப்பட்டு மழைநீர் தங்குதடையின்றி எளிதாக வெளியேற மழைநீர் குழாய்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன. தேங்கும் மழைநீரை வெளியேற்ற பணியாளர்கள் தயார்நிலையில் உள்ளனர். பல்வேறு பகுதிகளிலும் பயன்படுத்த உயர்திறன் கொண்ட உறிஞ்சும் இயந்திரங்கள் டேங்கர் லாரியுடன் மெட்ரோ வாட்டர் நிறுவனத்திடமிருந்து தருவிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. நீர்வழிக்கால்வாய்களில் ஆகாயத்தாமரை மற்றும் மிதக்கும் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.

மழைநீர் வடிகால்வாய்களில் தூர் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. ஓடைபாலங்கள் மற்றும் கால்வாய்களில் இருந்து தூர் அகற்றும் பணியும் நடைபெற்று வருகிறது. நிவாரண மையங்களும் தயார்நிலையில் உள்ளன. தேவையான அளவில் ப்ளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்யப்பட்டு தயாராக வைக்கப்பட்டுள்ளது. நகரும் மருத்துவ முகாம்களுக்கான மருத்துவ குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தேவையான அளவில் மருந்துக்களும் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் உள்ளது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**